பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 01 திங்கட்கிழமை (15 06-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 200

# கன்னியாவில் அதிரடி 4 படையினர் மரணம்

## ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூன் 15

திருகோணமலை, கன்னியா பகுதியில் நேற்றுக் காலை 5.45 மணியளவில் ஸ்ரீலங்கா விமானப் படையினர் மீது விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர். இந்தத் தாக்குதலில் நான்கு விமானப் படையினர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். 4 நவீன ரக துப்பாக்கிகள் உட்பட இராணுவத் தளபாடங்கள் பலவற்றையும் புலிகள் கைப்பற்றினர்.

கன்னியா பகுதியிலுள்ள வெல்வெரி விமானப்படை முகாமில் இருந்து 500 யார் தூரத்தில் வைத்தே இந்த அதிரடித் தாக்குதல் நடத்தப்பட்டது.

பத்துக்கு மேற்பட்ட படையினர் வீதித் தடைகளை அமைத்துக்கொண்டு வந்த சமயமே தாக்குதல் நடத்தப்பட்டது என்றும்—

உயிரிழந்த நான்கு படையினரின் சடலங்களையும் கைவிட்டு விட்டு ஏனையோர் காயங்களுடன் முகாமுக்கு ஓடித்தப்பினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம்—

திருகோணமலை மொறவேவா பகுதியில் நேற்று விடுதலைப் புலிகளுக்கும் அரசுப் படையினருக்கும் இடையே ஏற்பட்ட கடும் சண்டையில் இரண்டு விமானப்படையினரும், இரண்டு பொலீஸாரும் கொல்லப்பட்டனர் என்று கொழும்பில் பலட வட்டாரங்கள் தெரிவித்தன. [ஒ-எ]

### மீட்கப்பட்ட ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 15

கன்னியாவில் புலிகள் நடத்திய அதிரடியின்போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் மற்றும் இராணுவ தளபாடங்கள் வருமாறு;-

- ★ ரி 56 - 1 ரகத் துப்பாக்கி — 2
- ★ அவற்றிற்குரிய மகஸின் — 8
- ★ ரி 81 - 1 ரகத் துப்பாக்கி — 2
- ★ அவற்றிற்குரிய மகஸின் — 12
- ★ நடுத்தர ரவைகள் — 486
- ★ ஜே. ஆர். கிரனேட் — 5
- ★ ரி. என். ரி. குண்டு — 1
- ★ ஏ. கே. ஹோல்ஸர்கள் — 4

மற்றும் வெளிச்சக்குண்டு, தண்ணீர் தாங்கி, மழைக் கவசங்கள், சப்பாத்துகள், இராணுவப் பட்டி உட்பட வேறு தளபாடங்களும் கைப்பற்றப் பட்டன. [ஒ]

# வலி. வடக்கில் இடம்பெயர்ந்தோர் பண்டத்தரிப்பில் மரங்களின் கீழ்!

## பலரிடம் மாற்று உடை கூட இல்லை

யாழ்ப்பாணம், ஜூன் 15

கடந்த வியாழக்கிழமை வலிகாமம் வடக்குப் பகுதியில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையின் காரணமாக இடம்பெயர்ந்த சுமார் ஐயாயிரம் மக்கள் தங்குவதற்கு இடவசதியில்லாமல் தத்தளிக்கிறார்கள். அவர்களில் அனேகர் மர நிழல்களிலேயே தமது நாட்களை அச்சத்துடன் கழிக்கிறார்கள்.

பத்துக் கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் ஒரே பகுதியில் தங்க நேர்ந்ததால் அவர்களுக்குப் போதிய அடிப்படை வசதிகளும் இல்லை.

பல குடும்பங்கள் குழந்தைகளையும், வயோதிபர்களையும் எப்படிப் பராமரிப்பது என்று தெரியாமல் அவலப்படுவதை நேரில் பார்த்த போது நெஞ்சம் கனத்தது.

இளவாலை, கருகம்பனை, போயிட்டி, கூவில், மாரிசங்கூடல், சேந்தாங்குளம், கீரிமலை, சீந்துப்பந்தல், விளான், சித்திரமோழி ஆகிய கிராமங்களில் இருந்து இடம்பெயர்ந்த 800 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் ஐயாயிரம் பேர் பண்டத்தரிப்பில் மத்திமா கோவில், அந்தோனியார் ஆலயம், செபமாலைமாதா கோவில் ஆகியவற்றின் சுற்றாடல்களில் உள்ள சிறிய மரங்கள், பனைமரங்கள் ஆகியவற்றின் நிழல்களிலேயே வாழ்கிறார்கள்.

மரங்களின் கீழ் பனைஓலைகளாலும், சேலைகளாலும் சுற்றி மறைவிடங்களாக்கி விட்டு, தமது சொற்ப உடைமைகளுடன் சின்னஞ்சிறு பிள்ளைகளையும் வைத்துக் கொண்டு அவற்றில் தமது நாட்களைக் கழிப்பதைக் காண முடிந்தது.

மலசலகூட வசதியில்லை; குடிதண்ணீர் வசதியில்லை;

[6ஆம் பக்கம் பார்க்க]

15.6.92

# நேற்றும் பீரங்கித் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 15

வேலணை அராலித்துறை கடற்பிராந்தியத்தில் இருந்து நேற்றுக் காலை 2 ஆவது நாளாகவும் படையினர் கொட்டடி, நாவாந்துறை கரையோரப் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

இடையிடையே பீரங்கிப் படகில் இருந்தும், மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்தும் துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

இதேசமயம் —

பொன்னாலை, ஊர்காவற்றுறை, சேந்தாங்குளம் ஆகிய கடற் பிராந்தியங்களிலிருந்து நேற்று கடற்படையினர் பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர்.

[ஒ-3-15-28-162]

# வீடு பார்க்கச் சென்றவர்கள் சூட்டுக்கு இலக்காகினர்

## இளவாலைப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

இளவாலைப் பகுதியில் வீடு பார்க்கச் சென்றவர்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இருவர் காயமடைந்தனர். கருகம்பனைப் பகுதியில் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் மாலை தமது வீடுகளைப் பார்த்து, பொருள்கள் எடுத்து வருவதற்காகச் சென்ற குருதேவன் [20 வயது — சீந்துப்பந்தல்], சந்திரன் [21 வயது — சேந்தாங்குளம்] ஆகியோரே காயமடைந்தனர்.

பண்டத்தரிப்புப் பகுதியில் முகாமிட்டுள்ள செஞ்சிலுவைத் தொண்டர்கள் அவர்களுக்கு முதல் உதவிச் சிகிச்சை அளித்தனர். [ஒ-3]

# சிப்பாய் உயிருடன் இருக்க சடலம் வீட்டுக்குப் போனது!

கொழும்பு, ஜூன் 15

யுத்தத்தில் மகன் உயிரிழந்து விட்டதாக தந்தையிடம் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். தந்தையாரான நிபுனசோம சோகமே உருவாக மகனின் பிரேதத்தை எதிர்பார்த்தபடி காத்திருந்தார்.

நிபுனசோமாவின் மகன் செனவிரத்ன இறந்துவிட்ட செய்தி கிராமத்திலும் பரவியது. உயிரிழந்த இராணுவச் சிப்பாய்க்கு மரியாதை செலுத்தும் முகமாக கிராம மக்கள் அஞ்சலி நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகளைச் செய்தனர். சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. தோரணங்கள் கட்டும் வேலையும் ஆரம்பமானது.

அன்று மாலை இராணுவ அதிகாரிகள் பிரேதப்பெட்டியுடன் கிராமத்தை அடைந்தனர். பிரேதப் பெட்டி நிபுனசோமாவிடம் ஒப்படைக்கப்பட்டது. இறுதிக் கிரியைகளின்போது இராணுவ மரியாதை செலுத்த மறுநாள் வருவதாகக் கூறி அவர்கள் சென்று விட்டனர்.

அவர்கள் சென்றதன் பின்னர் மகனின் முகத்தைப் பார்ப்பதற்காக கண்ணீரும் கம்பலையுமாக தந்தை பெட்டியைத் திறந்தார்.

என்ன அதிசயம்! பிரேதப்

[6ஆம் பக்கம் பார்க்க]

## நாவற்குடாவில் பொலிஸ் நிலையம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

மட்டக்களப்பு, நாவற்குடாவில் புதிய பொலிஸ் நிலையம் ஒன்று திறக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது [ஒ]

## படையினர் உயிரிழப்பு - 140

கொழும்பு, ஜூன் 15

திருகோணமலை, கன்னியாப் பகுதியில் நேற்று படையினருக்கு ஏற்பட்ட உயிரிழப்புகளையும் சேர்த்து, தற்போதைய இராணுவ நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கை 140 என்று இராணுவம் கணக்கிட்டுள்ளதாக ஏஜென்ஸிச் செய்தி ஒன்று தெரிவித்தது. [ஒ-எ]

## மாதகல் பகுதியில் கடற்படை கப்பல்கள்!

சேந்தாங்குளம் — மாதகல் கடற்பகுதியில் இரு கடற்படைக் கப்பல்களும், 3 சிறிய கடற்படைக் படகுகளும் தரித்து நிற்பதாக அங்கிருந்து இடம்பெயர்ந்து வந்த மக்கள் தெரிவித்தனர்.

மாதகல் கரையோரப் பகுதியில் உள்ள மக்களும் இடம்பெயர்வதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

# விசேட பரீட்சை நடத்தப்பட்டதால் பல்கலைக் கழகத் தெரிவில் குளறுபடி!

## தமிழ் மாணவர்களுக்கு வெட்டுப்புள்ளி நிலை உயர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 15

1990 ஆகஸ்ட்டுக்குரிய ஜி. சி. ஈ. [உயர்தரப்] பரீட்சை வடக்கு - கிழக்கில் தனியாக — விசேட பரீட்சையாக — நடத்தப்பட்டதால், அப்பரீட்சை மூலம் மாணவர்களைப் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவு செய்வதில், புதிய நடைமுறையைப் பின்பற்றுவது என்று உயர் கல்வி அமைச்சும் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவும் முடிவு செய்திருக்கின்றனவாம்.

இப்புதிய நடைமுறையினால் வடக்கிலிருந்து பல்கலைக் கழகங்களுக்கு திறமை அடிப்படையில் (Merit Basis) தெரிவு செய்யப்படும் மாணவரின் எண்ணிக்கை கணிசமான அளவு குறையும் என்று விஷயமறிந்த வட்டாரங்கள் கவலை தெரிவிக்கின்றன.

பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் போது திறமை அடிப்படையில் 40 வீதமானோரையும் மாவட்ட அடிப்படையில் எஞ்சிய 60 வீதமானோரையும் தெரிவு செய்வதே வழமையான நடைமுறையாகும்.

இம்முறை இத்தகைய தெரிவின் போது —

நாட்டின் ஏனைய பகுதிகளில் 1990 ஆகஸ்டில் நடந்த பரீட்சையின் பெறுபேறுகளையும்—

வடக்கு - கிழக்கில் 1991 ஏப்ரலில் நடத்தப்பட்ட விசேட பரீட்சையின் பெறுபேறுகளையும் — ஒன்றாகக் கணிக்க

[6ஆம் பக்கம் பார்க்க]

உள்ளே...

தொண்டா

★

இராணுவத் தளபதி பேட்டிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

க. பொ. த. சாதாரண தர 92ஆம் ஆண்டிற்கான பரீட்சை விண்ணப்பப்படிவம் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. பிக் பென்ஸ் 'பி' புத்தகசாலை, கிளிநொச்சி. (4758)

### காணி விற்பனைக்கு

சாவகச்சேரி சந்தைக்கு அருகாமையில் நன்னீர்க் கிணறு, குடியிருப்பு வசதிகளுடன் கூடிய நான்கு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. காணி பார்வையிடல், சனி, திங்கட் கிழமைகளில், த. வேலாயுதம். சட்டத்தரணி. ஸ்ரேசன் றோட், சாவகச்சேரி. (21369)

### விற்பனையாகிறது

O/L. A/L கடந்தகால வினா - விடை வெளியீடு, ஒப்சேவர் டயறி, இந்தியா நாவல்கள், பாடசாலை மாணவர்களுக்குரிய கொப்பி, புத்தகங்கள் அச்சடிக்கும் திருமண கார்ட்டுகள் மற்றும் போட்டோஸ்ரற் வேலைகளுக்கு நாடுங்கள்; மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். ஸ்ரீகாந் புத்தகசாலை நல்லூர். (சி/2671)

### கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

கோலடன் கொமெற் பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. ஓடருக்கும் எடுத்துக் கொடுக்கப்படும். காலை 6-00 மணி தொடக்கம் 11-00 மணி வரை. தொடர்பு கொள்ளவும். ரவி றேடர்ஸ், பழக்கடை, திருநெல்வேலிச் சந்தி. [21339]

### மணப்பெண்கள் தேவை

36 வயது நிரம்பிய U. S. A. பிரஜா உரிமை பெற்ற பொறியியலாளருக்கும், 33 வயது ஜேர்மன் பிரஜா உரிமை பெற்ற T. A.க்கும் அழகான, படித்த மணப்பெண்கள் தேவை தீவக மணப்பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். G. குணரத்தினம், 169, பலாலி வீதி, யாழ்ப்பாணம். [21390]

### மணப்பெண் தேவை

35 வயது நிரம்பிய U. K பிரஜாஉரிமையுள்ள B. Com Ph. D. (Political Science) ஆணுக்கு படித்த, அழகிய மணப்பெண் தேவை G. குணரத்தினம் விவாகப் பொருத்துனர். 169, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (21391)

### தவறிவிட்டது

C 50 ஹொண்டா லான்சர் வாகனத்திற்குரிய பத்திரங்கள் அடங்கிய என்வலப் 14-06-92 காலை 4ஆம் குறுக்குத் தெருவுக்கும்-முத்திரைச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து யாழ். கொன்வென்ற் பாடசாலைக்கு முன்பாக உள்ள முச்சக்கர வண்டி சங்கக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். தி. சிவகுமார், நவாலி அரசடி மானிப்பாய். (11395)

சித்தன்கேணிக்கும் - சங்கானைக்கும் இடையில் 13-05-92 பிற்பகல் 4-00 மணியளவில் ஒரு புத்தகம் தவறிவிட்டது. பெயர் "விவாஹ மந்திரார்த்த போதினி". கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைக்கவும். தி. கணேஸ் வரஐயர், சிவன் கோயிலடி, ஸ்ரேசன் றோட் சுன்னாகம். (சி/2117)

### ஜோதிடம்

பங்குனி மாதம் வரை எம்மிடம் எழுதத் தந்த சாதகங்களை உடன் பெற்றுக் கொள்ளவும். புதிய சாதகம் எழுத ஓடர்கள் ஏற்கப்படும் ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், இல. 96, கோவில் வீதி, (ஸ்ரீ கைலாச பிள்ளையார் கோவில் சந்தி) நல்லூர். [21379]

## விசாரணை தொடர்கிறது

கொழும்பு, ஜூன் 15 கட்டுநாயக்கா விமான நிலையத்தில் 26 இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதை வஸ்துடன் அண்மையில் கைது செய்யப்பட்ட பெருமாள் பாலகிருஷ்ணன் [வயது 25] என்ற இந்தியப் பிரஜைக்கு மலையகத்தில் இருக்கும் தொடர்புகள் பற்றி பொலீஸ் போதை வஸ்துத் தடுப்புப் பிரிவினர் விசாரணை நடத்தி வருகின்றனர் என்று அறிவிக்கப்படுகிறது. [த]

## Exhibition
## Cake and Sugar Craft

மேற்படி கேக் கண்காட்சி 18 — 06 — 1992 முதல் 22 — 06 — 1992 வரை காலை 9-00 மணி முதல மாலை 6-00 மணி வரை தினமும் நடைபெறும்.

நடைபெறும் இடம்:
YOGI HOME SCIENCE ACADEMY,
71, Nayanmar Veethy,
Kachcheri Nallur Road,
Nallur, Jaffna. (சி-2114)

## இசை மாலை நிகழ்ச்சி
### பின்போடப்பட்டுள்ளது

செஞ்சோலை குழந்தைகளும், போராளிகளும் இணைந்து வழங்கும் இசை மாலை நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தால் பின்போடப்படடுள்ளது.

இந்நிகழ்ச்சி ஜூலை மாதம் நடைபெறும் என அறியத் தருகின்றோம். நிகழ்ச்சி நடைபெறும் நாட்கள் செய்தித்தாள்கள் மூலமும், "புலிகளின் குரல்" வானொலி மூலமும் அறியத் தரப்படும். திட்டமிட்டபடி நிகழ்ச்சியை நடத்த முடியாமைக்கு மனம் வருந்துகிறோம்.

— 'செஞ்சோலை நிர்வாகத்தினர்'.

[21398]

## Practice Makes One Perfect
## O/L 92

விஞ்ஞானம், கணிதம், தமிழ், சமூகக்கல்வி. ஆங்கிலம், வர்த்தகம் ஆகிய பாடங்களுக்கான

### பயிற்சிப் பரீட்சைகள்

3ஆவது பரீட்சை

**21 - 06 - 1992**

ஒவ்வொரு மாதத்தின் 3ஆவது ஞாயிற்றுக்கிழமைகளில் இந்நிறுவனங்களில் நடத்தப்படும். இந் நிறுவனங்களில் கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் பயிற்சிப் பரீட்சைகளில் பங்கேற்கலாம்.

- ★ Bond — யாழ்ப்பாணம்
- ★ Selin — இருபாலை
- ★ Pearl — நீர்வேலி
- ★ Kugan — ஆவரங்கால்
- ★ Satha Pons — வடமராட்சி
- ★ Brilliant — தென்மராட்சி
- ★ Vinyls — சுன்னாகம்
- ★ National — பண்டத்தரிப்பு
- ★ Subra — சித்தன்கேணி
- ★ Vinayahar — மானிப்பாய்
- ★ Y. M. C. A. — பருத்தித்துறை

வினாத்தாள்கள் பெற விரும்பும் பாடசாலைகள் 20-06-1992 இற்கு முன் தொடர்பு கொள்ளவும்.

விவரங்களுக்கு:
Examination Unit,
**BOND**
**Institutes,**
யாழ்ப்பாணம். [சி-4751]

### வளர்ப்பிற்கான கலப்பின மாடுகள், கன்றுகள், ஆடுகள்
## விற்பனை

கோப்பாய் இராஜ வீதியில் அமைந்துள்ள மேஜர் பிரதாப் செட்டி மாதிரி விவசாயப் பண்ணையில் ஜேர்சி கலப்பின மாடுகள், கன்றுகள். உள்ளூர் ஆடுகளும் விற்பனைக்கு உள்ளன. தேவையானோர் பண்ணை முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

[சி-2112]

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

"K. C. C. C." வெற்றிக் கிண்ணத்திற்காக கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட 30 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி.

விண்ணப்ப முடிவு திகதி: 21-06-1992
போட்டி ஒழுங்குத் தெரிவு: 23-06-1992 பி.ப. 4-00 மணி

விண்ணப்பக் கட்டணம்: ரூபா 250

குறிப்பு:- போட்டிகள் 27-06-1992 அன்று ஆரம்பமாகும்.

விவரங்களுக்கு:
செயலாளர்,
K. C. C. C. விளையாட்டுக் கழகம்,
கொக்குவில். [சி-2116]

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சோமசேகரம் ரஞ்சித்குமார்**

தோற்றம்:
22—10—1959

மறைவு:
15—06—1986

ஆண்டுகள் ஆறு சென்றாலும்
எம் நெஞ்சில் உம் நினைவு
நீங்காமல் துயருறும்;

- குடும்பத்தினர்.

264, பிரதானவீதி,
யாழ்ப்பாணம். [21396]

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

### அமரர் கதிரவேல்பிள்ளை விசாகப்பெருமாள்

(காட்டுவளவு வல்வெட்டித்துறை)

மண்ணில்: 12 — 01 — 1926
விண்ணில்: 16 — 05 — 1992

"சீவியத்தில் நேசித்தோம்
மரணத்திலும் மறவோம்"

இன்று [15-06-1992] திங்கள் ஊறணி மடத்தில் நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

K. V. ஒழுங்கை,
அரசடி, வல்வை. [21326]

## காரைநகர் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்

(வரைவுள்ளது)
வழக்கம்பரை, சுளிபுரம்.

### வருடாந்தப் பொதுக் கூட்ட
## அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 24-06-1992 புதன்கிழமை காலை 9 30 மணிக்கு பண்ணாகம் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் மேற்படி சங்கத் தலைவர் திரு. ச. சிவஞானம் (B. Sc. Dip in Ed.) அவர்களின் தலைமையில் நடைபெறும். பொதுச் சபை பிரதிநிதிகள் தவறாது குறிப்பிட்ட நேரத்திற்கு சமுகம் கொடுத்து ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

- செயலாளர்.

குறிப்பு: பொதுச் சபை பிரதிநிதிகள் பலர் இடம் பெயர்ந்துள்ளனர். தமது புதிய முகவரியை இதுவரை அறிவிக்கத் தவறியவர்கள் கூட்ட நிகழ்ச்சி நிரலை வழக்கம்பரையில் உள்ள சங்கத் தலைமைக் காரியாலயத்தில் செயலாளரிடம் பெற்றுக் கொள்ளவும். ஏற்கனவே எம்மிடம் தொடர்பு கொண்டு விலாசம் தந்தவர்களுக்கு அவர்களால் தரப்பட்ட விலாசத்திற்கு கூட்ட நிகழ்ச்சி நிரல் தபால் மூலம் அனுப்பப்படும்.

[சி-2115]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் கல்வி நிலையங்களில் மாணவர் தங்கு நிலை கூடாது

## யாழ். இந்து பரிசளிப்பில் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 15

பாடசாலைகளின் செயற்பாடுகளுக்கு மேலாகத் தனியார் கல்வி நிறுவனங்களை வளர விடுவது பாடசாலைகளுக்கும், மாணவர்களுக்கும் ஆபத்தை ஏற்படுத்தும். எனவே தனியார் கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் தங்கி நிற்கும் நிலை மாற்றப்பட வேண்டும்; அத்தகு நிலையைத் தடுப்பதற்கு பாடசாலைகளும், கல்வித் திணைக்களமும் நடவடிக்கை எடுக்க வேண்டும் — இவ்வாறு கோரிக்கை விடுத்தார் யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் திரு.அ. பரமேஸ்வரன்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கோரினார். கல்லூரி அதிபர் திரு. ஆ. பஞ்சலிங்கம் தலைமையில் நடந்த வியாழக்கிழமை இப் பரிசளிப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. அங்கு உரையாற்றுகையில் திரு. பரமேஸ்வரன் மேலும் கூறியதாவது:-

அரசாங்கம் தமிழ் மக்களின் வளம், பொருளாதாரம், வாழ்க்கை வழி போன்ற சகல வற்றையும் சீர்குலைத்து வருகின்றது; பொருளாதாரத் தடை போடுகின்றது; ஆனால் அவர்களால் எமது கல்வி பண்பாடு கலாசாரம் போன்றவற்றை அழித்துவிட முடியாது. அது எம்மோடு எமது இரத்தத்தோடு சேர்ந்தது கல்வி தான் எமது மூலவளம். தொழில் வளம், விவசாய வளம் போன்றவை தடுக்கப்பட்டாலும் எமது எதிர்காலத்துக்கு கல்வி மூலதனமாகின்றது எனவே இன்றைய சூழலில் எமக்கு கல்வி பிரதானமானது. அதைப் பேணி வளர்ப்பது எமது ஒவ்வொருவரினதும் கடமையுமாகும்.

இதே போன்று மாணவர் மத்தியில் ஒழுக்கம், பண்பாடு போன்றவை பேணப்படுதலும் அவசியம்.

அரசாங்கத்தின் கல்வி முறையால், கல்விக் கொள்கைகளில் தனிப்பட்ட கல்வி நிறுவனங்கள் இன்று அபரிமிதமாக வளர்ந்துள்ளன இன்று மாணவரின் கல்விப் பெறுபேறுகளுக்கு தனிப்பட்ட கல்வி நிறுவனங்களே உரிமை கோருகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

மாணவர் கஷ்டங்களைப் பெற்றோராகிய நாம் உணர்கின்றோம். அவர்களுக்கு ஓய்வு நேரம் என்பதே இல்லை; விளையாட்டு, உடற்பயிற்சி என்பவற்றுக்கும் நேரம் இல்லை; தாய், தந்தையருக்கு உதவியாக வீட்டு வேலை செய்வதற்கும் நேரம் இல்லை; முழு நேரமும் கல்லூரியிலும், தனிப்பட்ட கல்வி நிலையங்களிலுமே கழிகின்றது. இது மாணவர் சமுதாயத்தின் எதிர்காலத்தைப் பாதிக்கக் கூடியதொன்று. இந்த இக்கட்டான நிலைக்கு தீர்வு காணப்பட வேண்டியது அவசியம்.

இச் சமுதாயத்தின் செலவில் கல்வி கற்று வருபவர்கள் — மாணவர்கள். நீங்கள் இச்சமுதாயத்திற்காக, அதன் அபிவிருத்திக்காக உங்கள் உழைப்பைச் செலுத்த வேண்டும். கல்வி கற்று முடிந்த பின் இம் மண்ணை விட்டு ஓடாது, இம் மண்ணின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட வேண்டும் — என்றார்.

திருமதி ஜெயமலர் பரமேஸ்வரன் மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கினார்.

[உ-162]

# உடற்பயிற்சி ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பம்

கொழும்பு, ஜூன் 15

கல்விச் சேவைகள் சபை 250 விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி ஆசிரியர்களை சேவையில் ஈடுபடுத்தவுள்ளது.

இப் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் இப்போது கோரப்பட்டுள்ளன.

சிங்கள, தமிழ் மொழிப் பாடசாலைகளில் இந்த ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்.

18-35 வயதுக்கு இடைப்பட்டவர்களும் கனிஷ்ட பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் சித்தி அடைந்தவர்களும் அல்லது அதை விடக்கூடியதான கல்வித் தகைமை உடையவர்களும் விண்ணப்பிக்கலாம்.

செய்முறைப் பரீட்சையின் பின்னர் தெரிவுகள் மேற்கொள்ளப்படும். ஆசிரியர்கள் பற்றாக்குறையுள்ள மாவட்டங்களில் வசிப்பவர்களின் விண்ணப்பங்களுக்கு விசேஷ கவனம் செலுத்தப்படும்.

இவ்வாறு தெரிவு செய்யப்படுபவர்களுக்கு மூன்று மாத காலப் பயிற்சி வழங்கப்படும். எழுத்துப் பரீட்சை, செய்முறைப் பரீட்சை ஆகியவற்றை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த பின்னர் நியமனங்கள் வழங்கப்படும்.

இம்மாதம் 5 ஆம் திகதி வெளியான வர்த்தமானியில் இது சம்பந்தமான விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பத்தரமுல்லை, 'இசுருபாயா'வில் உள்ள கல்விச் சேவைகள் சபைக்கு இம் மாதம் 26 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-எ)

## நெஸ்பிறே விலை மேலும் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 15

நெஸ்பிறே பால் மாவின் விலை மேலும் இரண்டு ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

400 கிராம் பைக்கெட் விலை இனி 56 ரூபா என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஏப்ரல் 15 ஆம் திகதி நெஸ்பிறேயின் விலை 51 ரூபாவில் இருந்து 54 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. பால் உற்பத்தியாளருக்கு உதவ இவ்விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டதாக அப்போது கூறப்பட்டது.

இரண்டாவது விலை அதிகரிப்பு, பாதுகாப்பு வரி உயர்த்தப்பட்டதனால் மேற்கொள்ளப்பட்டதாக இப்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

[இ-எ]

# வடக்கு-கிழக்கு யுத்தத்தால் தென்பகுதி மீனவர் பாதிப்பு

## சுதந்திரக் கட்சி எம்.பி, கவலை

கொழும்பு, ஜூன் 15

வடக்கு-கிழக்கு யுத்தத்தினால் தென்பகுதி மீனவர்கள் கிரிந்தைக்கு அப்பால் சென்று மீன் பிடித் தொழிலில் ஈடுபட முடியாதுள்ளனர்.

சுதந்திரக் கட்சி எம். பி. திரு. மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கடற்றொழிலாளர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலனபுரித் திட்டச் சட்ட விவாதத்தில் கலந்து கொண்டு அவர் பேசினார்:

அவர் மேலும் சொன்னதாவது;

வடக்கு-கிழக்கு யுத்தம் தொடருகிறது. ஆரம்பமான இடத்தைச் சுற்றியே யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது, இதனால் தென்பகுதி மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். முன்பெல்லாம் தெவிநுவரையில் இருந்து பருத்தித்துறை வரை சென்று எமது மீனவர்கள் மீன் பிடித்தனர். அவர்களால் கந்தறையில் இருந்து முல்லைத்தீவு வரை செல்ல முடிந்தது. தென்பகுதி மீனவர்கள் திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை எங்கும் சென்று தொழில் செய்யக் கூடியதாக இருந்தது.

ஆனால் தற்போது எமது மீனவர்கள் தெற்கே கிரிந்தைக்கு அப்பாலும் — சிலாபத்துக்கு அப்பால் புத்தளம் மற்றும் மன்னார் வரையும் செல்ல முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நிலைமையில் – நன்னீர் மீன்வளர்ப்பு, பௌத்த மத குருமாரின் கோரிக்கையின் மீது தடை செய்யப்பட்டுள்ளது.

பௌத்த மத குருமார் சொல்லும் விதத்தில் பூரணமாக நாம் செயல்பட முடியாது. நன்னீர் மீன் வளர்ப்பு ஜீவனோபாயத் தொழிலாகும்; அதனைத் தடை செய்யும்படி புத்த பெருமான் கூறியுள்ளாரா?

எனினும் பாரிய நிறுவனங்கள் நன்னீர் மீன் வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றன. அவற்றின் உற்பத்தி டின் மீன்களாக இங்கு வந்து குவிகின்றன.

இதே வேளை எமது மீனவர்கள் தொழில் செய்ய முடியாது கஷ்டப்படுகின்றனர் — இப்படி திரு. ராஜபக்ஷ சொன்னார். (த எ)

# உல்லாசப் பயண ஹோட்டல்களுக்கு எதிராக ஹெல உறுமய இயங்கும்

கொழும்பு, ஜூன் 15

நாட்டின் சில பகுதிகளில் உல்லாசப் பயண ஹோட்டல்கள், விருந்தினர் விடுதிகள் மற்றும் வாடி வீடுகள் ஆகியவற்றுக்கு எதிராக சுதந்திரக் கட்சியில் உள்ள ஹெல உறுமய அணியினர் இயக்கம் ஒன்றை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளனர்.

இந்த இயக்கத்துக்கு திரு. அனுரா பண்டாரநாயக்கா தலைமை வகிப்பார்.

சமய மற்றும் கலாசார முக்கியத்துவம் வாய்ந்த அனுராதபுரம், பொலன்னறுவ, திஸ்ஸமகாராம, கண்டி, தம்புள்ள மற்றும் கதிர்காமம் போன்ற பகுதிகளில் உள்ள உல்லாசப் பயண ஹோட்டல்கள் மற்றும் விடுதிகளை மூடிவிட வேண்டும் என்று அரசாங்கத்தை வற்புறுத்துவதே இந்த இயக்கத்தின் நோக்கமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

உல்லாசப் பயண ஹோட்டல்கள் மற்றும் விடுதிகள் உள்ள புனித இடங்களில் சத்தியாக்கிரகங்கள் மற்றும் ஆட்சேபக் கூட்டங்களை நடத்துவதும் ஹெல உறுமய அணியினரின் நோக்கமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

# மட்டக்களப்பு நகரில் புதிதாக காவலரண்கள்

மட்டக்களப்பு, ஜூன் 15

மட்டக்களப்பு நகரில் புதிதாக மேலும் பல காவலரண்களை படையினர் அமைத்து வருகின்றனர்.

நகருக்குள் உள்ள லேக் வீதியில் மாத்திரம் நான்கு காவலரண்கள் அமைக்கப்பட்டு, மேலதிக படையினர் காவலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை —

மட்டு நகருக்குள் பிரவேசிக்கும் நுழைவாயில்கள் மற்றும் ஏனைய இடங்களில் உள்ள 'சென்றிகளில்' கடந்த சில தினங்களாக சோதனை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

[உ-3]

# வழிபாட்டு, சுயநிர்ணய உரிமைக்காகப் பிரார்த்தனை

## வெள்ளிதோறும் ஆலயங்களில்

யாழ்ப்பாணம், ஜூன் 15

மக்களின் வழிபாட்டு உரிமை பறிக்கப்படாமல் இருக்கவும், தமிழர்களின் சுயநிர்ணய உரிமை நிலை நிறுத்தப்படவும், யுத்தத்தினால் இடம்பெயர்ந்துள்ள மக்கள் தமது சொந்த வாழ்விடங்களில் குடியமரவும் வெள்ளிக்கிழமை தோறும் கோவில்களில் சிறப்புப் பிரார்த்தனை நடத்தும் இயக்கம் ஒன்று கடந்த வெள்ளி ஆரம்பிக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டம் இங்கினியாகலை பிள்ளையார் கோவில் 12-6-90 இல் தாக்கப்பட்டது. அதன் இரண்டாவது வருட நினைவாகவே பிரார்த்தனை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட இந்து இளைஞர் பேரவையும், நல்லை ஆதீனமும் சேர்ந்து தொடக்கியுள்ள வெள்ளிக்கிழமைச் சிறப்புப் பிரார்த்தனை இயக்கம் குடாநாட்டில் உள்ள இந்து இளைஞர் மன்றங்கள், மற்றும் ஆலய வழிபடுவோர் சங்கங்கள் மூலமாக விஸ்தரிக்கப்படும்.

வழமையான வெள்ளிக்கிழமைப் பஜனையுடன் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அவலங்களும், மரண ஓலங்களும் முற்றுப்பெற வேண்டியும் பிரார்த்தனைகள் நடத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

[அ-30]


திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவில்

**10ஆம் திருவிழா விஞ்ஞாபனம்**

காலம்: 1992 - 06 - 16 திகதி செவ்வாய்க்கிழமை
நேரம்: மாலை 5-30 மணியளவில்

1. மேளக்கச்சேரி:
   (1) ஈழநல்லூர் பெருமாள் குழுவினர்
   (2) இணுவிலூர் சுந்தரமூர்த்தி குழுவினர்
2. அன்னச் சோடினையில் சுவாமி வீதிவலம் வருதல்
3. வழக்காடு மன்றம்:
   " இராமன் மேல் வழக்கு:
   வாலியை வதை செய்தது குற்றம்"
   நீதிபதி: திரு. இ. ஜெயராஜ்
   அமைப்பாளர் அகில இலங்கைக் கம்பன் கழகம்

| வாதிகள் | பிரதி வாதிகள் |
|---|---|
| கலைப் பேரரசு. திரு. A. T. பொன்னுத்துரை | திரு. இரா. செல்வவடிவேல் |
| திரு. த. சிவகுமாரன் | திரு. தி. திருநந்தகுமார் |
| திரு. ஆ. திருமுருகன் | திரு. க. குமாரதாசன் |

4. வில்லிசை:
   வில்லிசைப் புலவர், கலாவிநோதன், திரு. சின்னமணி குழுவினர் அளிக்கும்
   "வைர முக்குத்தி"

10 ஆம் திருவிழா உபயகாரர்- இளைஞர்கள்.

குறிப்பு: தொடர்ந்து மாலை 7-00 மணியளவில் கம்பராமாயண விரிவுரை நடைபெறும்.

[illegible] ஆறுமுகம் சிற்பாலயம், திருநெல்வேலி. [21401]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானப் பேச்சுக்கள் நடத்துவதற்காக ராணுவத் தாக்குதலை நிறுத்தமாட்டோம்

## தளபதி சிசில் வைத்தியரத்னா பேட்டி

கொழும்பு ஜூன் 15

''விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் சமாதானப் பேச்சுகள் நடத்துவதற்காக தற்போது நடத்தப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்படமாட்டா.

படையினர் வெற்றிகாணும் வரை —

வடக்கு - கிழக்கில் சகஜ நிலையை மீண்டும் ஏற்படுத்தும் வரை யுத்தம் தொடரும்.''

இராணுவத் தளபதி ஜெனரல் சிசில் வைத்தியரத்தினா ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இராணுவ நடவடிக்கைகள் காலத்துக்குக் காலம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு வருகின்றன. படையினரின் போர்க் களைப்பை தவிர்க்கவே இப்படி செய்யப்படுகிறது இத்தற்காலிக நிறுத்தங்கள் இராணுவ நடவடிக்கையின் முடிவாகக் கருதிவிடக்கூடாது, இராணுவ நடவடிக்கையின் ஒரு கட்டத்தின் முடிவாகக் அவற்றைக் கருதலாம்.

— இவ்வாறு இராணுவத் தளபதி அப்பேட்டியில் மேலும் தெரிவித்தார்.

## 'அக்னி' மீண்டும் ஏவப்படும்

சென்னை, ஜூன் 15

இந்தியாவின் அடுத்த ''அக்னி'' ஏவுகணை வானிலை ஒத்துழைத்தால் இன்னும் இரண்டு மாதங்களில் விண்ணில் செலுத்தப்பட்டு சோதனை செய்யப்படும் என்று இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் திரு. ஷரத் பவார் தெரிவித்தார்.

இந்தியாவின் பாதுகாப்பை முன்னிட்டு இது போன்ற சோதனைகள் அவசியம் என்றார் அவர். [த]

## வர்மா குழுவின் அறிக்கை இன்று

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலைக்கு காரணமான பாதுகாப்புக் குறைபாடுகள் பற்றி விசாரணை நடத்திய வர்மா ஆணைக்குழு தனது அறிக்கையை இன்று (திங்கட்கிழமை) உள்துறை அமைச்சர் சவானிடம் கையளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [உ-3]

## இரைச்சல் போராட்டம்; ஆதரித்துப் பிரசுரங்கள்

கொழும்பு, ஜூன் 15

எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி எதிர்க்கட்சிகள் நடத்தவிருக்கும் 'இரைச்சல்' போராட்டத்துக்கான துண்டுப் பிரசுரங்கள், சுதந்திரக் கட்சித் தலைவர்களால் கடந்த வியாழக்கிழமை கொழும்பு நகரில் வீதி வீதியாக பொதுமக்கள் மத்தியில் விநியோகம் செய்யப்பட்டன.

இதற்கு சுதந்திரக் கட்சி எம். பி. அனுரா பண்டாரநாயக்கா தலைமை வகித்தார்.

இரைச்சல் போராட்டத்துக்கு பொதுமக்களின் ஆதரவைக் கோரி அத்துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டிருந்தன. [உ-எ]

## போர்முனையில் பணிபுரிய மறுத்த கடற்படை அதிகாரிக்கு சேவைநீடிப்பு

கொழும்பு, ஜூன் 15

1985 ஆம் ஆண்டில் போர் முனையில் பணிபுரிய மறுத்ததிற்காக பதவி விலகும்படி உத்தரவிடப்பட்டிருந்த சிரேஷ்ட கடற்படை அதிகாரி ஒருவருக்கு இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இது பற்றி பாதுகாப்பு அமைச்சு பூரண விசாரணை நடத்தி நாடாளுமன்றத்துக்கு அடுத்த மாதம் ஏழாம் திகதி அறிவிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி கொரடாவும சுதந்திரக்கட்சி எம். பியுமான றிச்சர்ட் பதிரான கோரியிருக்கிறார்.

இது சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் கேள்வி ஒன்றை எழுப்புவதற்கும் திரு. பதிரான முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

அந்தமுன்னறிவித்தலில் முன்கண்ட விஷயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

1985 இல் பதவி விலகும்படி கோரப்பட்ட அந்த கடற்படை அதிகாரிக்கு அதற்குப் பின்னர் இரண்டு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

## கொழும்பில் வெள்ளம்: முதலமைச்சரை ராஜினாமா செய்ய கோருகிறார் மனைவி!

கொழும்பு, ஜூன் 15

கொழும்பில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு மாகாண முதலமைச்சர் சுசில் முனசிங்காவுக்கு சிக்கலை தோற்றுவித்துவிட்டது.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தில் மேல் மாகாண [கொழும்பு] முதலமைச்சரான சுசில் முனசிங்கா வீடும் மூழ்கிவிட்டது. அதனால் அவரது மனைவியும் மகளும் பெரும் சீற்றம் அடைந்துள்ளனர்

அவர்கள் இருவரும் திரு. முனசிங்காவை பதவி விலக வேண்டும் என்று போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

முதலமைச்சரே [முனசிங்கா] உள்ளூராட்சி அமைச்சர் என்றதால் அவர் பதவி விலகவேண்டும் என்று காரணம் தெரிவித்துள்ளனர்.

இதேசமயம்—

''நான் பதவி விலகுவதற்கு காரணம் ஏதும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை''— என்று திரு. முனசிங்கா கூறியுள்ளார்.

''கவலையுள்ள மனிதனாக நான் இன்று இருக்கின்றேன். கொழும்பு - 7 பகுதி வெள்ளத்தில் மூழ்கியது என்று உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகின்றதா? இதற்கு நானே, மாகாண உள்ளூராட்சி அமைச்சர் என்ற முறையில், பொறுப்பு என்று எனது மனைவியும்

[6 ஆம் பக்கம் பார்க்க]

# தமிழ் தனித்துவமாக வளரவல்லது; செயலில் காட்டியவர் விபுலாநந்தர்

## மானிப்பாய் விழாவில் பேராசிரியர் சண்முகதாஸ்

மானிப்பாய், ஜூன் 15

தமிழ் மொழி தனதுதனித்துவத்துடன் வளர வல்லது; வளர்ந்தது; வளரும் என்பதனை செயலில், நடைமுறையில் — செய்து காட்டியவர் சுவாமி விபுலாநந்தர்.

வடமொழியோடு சேர்ந்தால் தான் தமிழ் வளர முடியும் என்ற கருத்துத் தப்பானது. தமிழ் தனித்தே தோன்றியது. அந்தத் தனித்துவத்துடன் வளரக்கூடிய உயிரும், ஊட்டமும் நிறைந்தது என்று எடுத்துக் காட்டியவர்களில் அடிகளார் முதன்மையானவர்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற விபுலாநந்தர் நூற்றாண்டு விழாவில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விழா ஆரம்பமாவதற்கு முன்னர், மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திலிருந்து அடிகளாரின் திருவுருவப்படம் அலங்கார ஊர்தியில் கல்லூரிக்கு எடுத்துவரப்பட்டது. அயற்கிராமங்களில் அரச படையினரின் அட்டூழியங்கள் நடந்து கொண்டிருந்தபோதிலும், அடிகளாரின் உருவப்பட ஊர்வலம் திட்டமிட்டபடி பெருந்தொகையான கூட்டத்தினருடன் நடைபெற்றது.

வீதி நெடுகிலும் மகர தோரணங்கள் கட்டி, பூரண கும்பங்கள் வைத்து அடிகளாரின் திருவுருவப்படத்திற்கு மலர்தூவி அஞ்சலித்து வாழ்த்தினர்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபரானவிபுலாநந்த அடிகளாரின் நூற்றாண்டு விழாவுக்கு இந்நாள் அதிபர் திரு. சி. கேசவராஜன் தலைமை வகித்தார்.

மூதறிஞர் க. சி. குலரத்தினம் ஆசியுரை வழங்கினார்.

பேராசிரியர் சண்முகதாஸ் தமது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:

அடிகளார் வாழ்ந்த காலம் தமிழ் ஓங்கி வளர வேண்டிய காலமாக இருந்தது. வடமொழியோடு சேர்ந்து தான் தமிழ் வளரலாம் என்ற தப்பான கருத்தை மாற்றுவதில் வெற்றி கண்டவர் அடிகளார்

தமிழின் தொன்மை பேணப்படுவதோடு மட்டுமல்லாமல் அது ஏனைய மொழிகளுக்கு இணையாக வளர வேண்டும் என்ற எண்ணம் அடிகளாரிடம் மிகுந்திருந்தது.

அத்தகைய சிந்தனை மீண்டும் இப்போது மலர்ந்து வருவதைக் காண்கிறோம். இன்றைய தேவைகளுக்கு அடிகளாரின் அன்றைய சேவை வித்திட்டுள்ளது.

அடிகளார் கிழக்குக்கு மட்டுமன்றி வடக்கிற்கும் தனது சேவையை நல்கியுள்ளார். தமிழீழ மலர்ச்சிக்குத் தன்னை அர்ப்பணித்துள்ளார்.

மட்டக்களப்பில் வெறும் மயில்வாகனனாராக இருந்தவர் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு வந்ததும் தமிழ் மக்களையும், தமிழ் மொழியையும் நினைத்துத் துறவியாகினார் — என்று சொன்னார்.

திருவாளர்கள் எஸ். சிவலிங்கராசா, எம். வேதநாயகம், வளநாடன், திருமதி கே. பவசிங்கம் ஆகியோரும் விழாவில் உரையாற்றினர்.

நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு மானிப்பாய் இந்துக் கல்லூரி, பாடசாலைக் களுக்கிடையே நடத்திய நாவன்மைப் போட்டிகளில் பரிசு பெற்ற மாணவர்களும் விழாவில் உரையாற்றினர். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. [அ-90]

## சிறந்த பண்பு கல்வி கூடத்தில் உருவாக்கப்பட வேண்டும்

### கல்விப் பணிப்பாளர் உரை

வண்ணார்பண்ணை, ஜூன் 16

மண்பற்று, மொழிப்பற்று, இறைபக்தி, பெற்றோரைப் பேணுதல், பெரியோருக்கு மதிப்பளித்தல் போன்ற பண்புகள் சிறார்களுக்கான கல்விக் கூடங்களில் வளர்த்தெடுக்கப்படல் வேண்டும். சிறார்களுக்கு கல்விக் கூடங்களே நல்வழி காட்டி, சிறு வயதில் இருந்து அவர்கள் கற்றுக் கொள்ளும் பழக்க வழக்கங்களும் நெறிமுறைகளும் தான் அவர்களுக்கும் அவர்கள் வாழும் சமூகத்திற்கும் பின்னர் உதவுகின்றன.

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் தமிழ்த் தின பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது:-

சமீபகாலங்களில் கணித பாடப் பெறுபேறு சிறிது கவலையளிப்பதாக உள்ளது. இதனை மாற்ற சிறுவயதில் இருந்தே உரிய பயிற்சிகள் தாராளமாக வழங்கப்பட வேண்டும். பிள்ளைகள் கல்குலேற்றர் போன்ற கருவிகளை பாவிக்கும் நிலையை மாற்றி தாமாகவே சிந்தித்து செயற்பட்டால் கல்வியில் பூரணத்துவமான வளர்ச்சியை அவர்கள் பெறமுடியும்.

இவ் விழாவில் பல பிரமுகர்கள்கலந்துகொண்டனர். இறுதியில் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (த-162)


## மாதகல் புனித அந்தோனியார் ஆலயம்

13-6-92 இல் நடைபெற இருந்த புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் 15 ஆம் திகதி நற்கருணை ஆசீர்வாதமும், 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு திருநாட் திருப்பலியுடன் திருச்சுருபப் பவனியும், திருச்சுருப ஆசீர்வாதமும் நடைபெறும்.

ஆலய நிர்வாகம்

[21402]



## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

முத்துக்குமாரு செல்லத்துரை

தோற்றம் : 10 — 04 — 1900

மறைவு : 16 — 05 — 1992

தெய்வமாய் வந்துதித்து, எங்களைத் தொய்யாத வாழ்க்கைக்கு வழிப்படுத்திய எங்கள் பாசமிகு தந்தையின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

''அம்மா''
இணுவில் கிழக்கு.

— குடும்பத்தினர்

(சி/2118)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### சொல்வதும் செய்வதும்

தமிழீழ விடுதலைப் புலிகள் உலகின் மிகச் சிறந்த கரந்தடிப் படையினராக விளங்குகிறார்கள். அவர்களை முழுமையாக வெற்றி கொள்வது என்பது இயலாத காரியம் — இவ்வாறு தெரிவித்திருக்கிறார் அரசாங்க உயர் அதிகாரி ஒருவர்!

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவது இயலாத காரியமல்ல என்று இராணுவ அதிகாரிகள் கூறினாலும்கூட, அதனைத் தொடர்ந்து கட்டுப்பாட்டில் வைத்திருப்பது மிகவும் கடினம் என்பதே உண்மை — என்றும் அந்த அதிகாரி சொல்லியிருக்கிறார்!

பலாலி இராணுவ முகாமைச் சூழவுள்ள தமது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேச எல்லையை விஸ்தரிக்கும், அகலிக்கும் நோக்குடன் மே மாதம் 28 ஆம் திகதி இராணுவத்தினர் தொடங்கிய வளலாய் நடவடிக்கை வெற்றி அளிக்கவில்லை. ஆனால் அது உட்பட தெல்லிப்பழைப் பக்கமாகவும், கீரிமலைப் பக்கமாகவும் நகர்வதற்கு மேற்கொள்ளப்பட்ட சகல இராணுவ நடவடிக்கைகளிலும் முப்படைகளின் முழுப்பலமும் (ஆயுதப்பலம்,ஆட்பலம், தளபாடப் பலம்) பயன்படுத்தப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் கேணல் சரத் முனசிங்கா பகிரங்கமாகத் தெரிவித்திருக்கிறார்!

கடந்த 15, 16 நாட்களாகக் குடாநாட்டில் நடந்த யுத்தத்தில் இராணுவத்தினர், புலிகளின் கடும் எதிர்ப்பையும், உக்கிர தாக்குதல்களையும் எதிர்கொள்ள வேண்டி இருந்ததாக இராணுவ அதிகாரிகளை மேற்கோள்காட்டி, கொழும்புப் பத்திரிகைகள் தமது முன் பக்கத் தலைப்புச் செய்திகளில் எழுதியுள்ளன!

யாழ்ப்பாணத் தாக்குதல்களில் 26 விடுதலைப் புலிகளே வீரச்சாவை எய்தியுள்ளார்கள். ஆனால் இராணுவத் தரப்பில் நூற்றுக்கு மேற்பட்ட சிப்பாய்கள் உயிரிழந்ததாக ஏஜென்ஸிச் செய்திகள் கூறுகின்றன!

இத்தகைய ஒரு பின்னணியில், குடாநாட்டில் இராணுவத் தாக்குதல்கள் தொடரும் என்றும், 3 கேந்திர நிலையங்களைப் பிடிப்பதற்காக இரண்டாம் கட்ட நடவடிக்கை நடத்தப்படும் என்றும் அவற்றுள் ஒன்று மாதகல் என்றும் கொழும்பில் செய்திகள் வந்த வண்ணமுள்ளன.

புலிகளை வெல்ல முடியாது, பலவீனப்படுத்த முடியாது என்பது தெரிந்துகொண்டும் —

யாழ்ப்பாணத்தைப் பிடித்தாலும் தொடர்ந்து வைத்திருக்க முடியாது என்பதை ஒப்புக் கொண்டும் — பெரும் தாக்குதல்களைத் தொடரப் போவதாகக் கூறுவதன் அர்த்தம் என்ன?

ஏற்கனவே இப்பத்தியில் பல தடவைகள் கூறிய ஒன்றுதான். இயன்றவரை அதிக எண்ணிக்கையான தமிழர்களைக் கொன்றும், தமிழ் மண்ணைச் சிதைத்தும் வடக்கையும் சிங்களவர் பிரதேசமாக்குவதே அந்த நோக்கமும் அர்த்தமுமாகும்!

வடக்கில் தாம் கைப்பற்றிய கரையோரப் பிரதேசங்களில் சிங்களவர்களைக் கொண்டு வந்து குடியேற்றுவதற்கு அரசாங்கம் முயற்சித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!!

அப்படி ஒரு சதித்திட்டம் ஆரம்பமாகுமானால், அறுபது வயதுத் தமிழனும் ஆயுதம் ஏந்திப் போராடும் மக்கள் புரட்சி ஒன்று வெடிக்காமல் போகாது!!!

# 2 பிரதான கட்சிகளும் யோசனைகளை முன்வைத்தாலே பிரச்சினைக்குத் தீர்வு

## தொண்டமான் சொல்கிறார்

கொழும்பு, ஜூன் 15

'தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யக்கூடிய யோசனைகளை பேரினவாதக் கட்சிகள் முன்வைக்காதவரை இனப்பிரச்சினை தீரப்போவதில்லை'

—இப்படிக் கூறினார் அமைச்சர் எஸ். தொண்டமான்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் அவர் இப்படிக் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

புரையோடிப் போயிருக்கும் இந்த பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமானால் ஆளும் கட்சியான ஐ. தே. கவும், பிரதான எதிர்க்கட்சியான சுதந்திரக் கட்சியும் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் புரிந்து, உணர்ந்து அந்த அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய யோசனைகளை முன்வைக்க வேண்டும். இந்தக் கடமையில் இருந்து இந்த இருகட்சிகளும் தவறுமேயானால் இனப்பிரச்சினை நீடிக்குமே தவிர தீரப்போவதில்லை.

கடந்த ஒரு தசாப்தத்துக்கு மேலாக இனப்பிரச்சினை பற்றி பேசியாகிவிட்டது. கண்ட பலன் என்ன? அழிவுகள்தான் தொடர்கின்றன.

வட்டமேசை, அனைத்துக் கட்சிகள் கூட்டம் தெரிவுக் குழு என்று பல்வேறு கோணங்களில் இனப்பிரச்சினை ஆராயப்படுகிறது. ஆனால் பேரினவாதக்கட்சிகள் இந்த இனப்ரபிச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை முன்வைக்காதவரை பிரச்சினை தீரப்போவதில்லை. எனவே இந்த இருகட்சிகளும் யோசனைகளை முன்வைக்கவேண்டும். அப்பொழுதுதான் இனப்பிரச்சினையை ஒரு முடிவுக்கு கொண்டுவர முடியும்.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் பொறுப்பு இந்த விவகாரத்தில் முக்கியமானது. இனப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காணப்படவேண்டுமானால், அவர் நாட்டின் தலைவர் என்றவகையில் இதற்கான வழிவகைகளை முன்னெடுத்துச் செல்ல கடமைப்பட்டிருக்கிறார்- என்றார்.

[உ-3]

## தனுவை புகழும் கவிதைநூல் நான்கு பேர் மீது வழக்கு

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை கொல்வதற்குக் காரணமாக இருந்தவர் எனக் கூறப்படும் தனுவின் செயலை, புகழ்ந்துரைக்கும் புத்தகங்களை விற்பனை செய்த நால்வர் மீது பொலிஸார் வழக்கு தொடர்ந்துள்ளனர்.

புதுவை கம்பன் கலையரங்கில் நடைபெற்ற பாரதிதாசன் நூற்றாண்டு விழாவின் போதே இந்த புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டன.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தரும் அமைப்பான தமிழ் இன முன்னேற்றக் கழகத்தின் ஸ்தாபகர் பெருஞ்சித்திரனார், 'தமிழ் நிலம்' என்ற புத்தகத்தை விற்பனை செய்தார்.

அப்புத்தகத்தில் தனுவைப் புகழ்ந்து பாடப்பட்ட கவிதை அடங்கியிருந்தது தகவல் கிடைத்ததும் புதுவை பொலீஸார் அப்புத்தகங்களில் சிலவற்றை பறிமுதல் செய்தனர்.

'தமிழ் நிலம்' புத்தகத்தை எழுதிய பெருஞ்சித்திரனார், அச்சிட்ட சென்னை தேன்மொழி அச்சக உரிமையாளர், புத்தகத்தை விற்பனை செய்த சென்னையைச் சேர்ந்த மயிலை வாசு, புதுவை அய்யாக்குட்டிபாளையத்தை சேர்ந்த பச்சையப்பன் ஆகிய நால்வர் மீதும் சட்டவிரோத நடவடிக்கை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

[உ-3]

## இனப்பிரச்சினையை தீர்ப்பதில்: பதவியை தியாகம் செய்யவும் பிரேமதாஸா தயாராம்!

கொழும்பு, ஜூன் 15

இனப்பிரச்சினைக்கு இவ்வருட இறுதியினுள் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய அரசியல் தீர்வு ஒன்று காணப்படும். அதற்காக எனது ஜனாதிபதி பதவியைக் கூட தியாகம் செய்வதற்கு நான் தயாராகவுள்ளேன்.

திரு. பிரேமதாஸா, தம்மைச் சந்தித்த தமிழ்க் காங்கிரஸ் பிரதித் தலைவர் மோதிலால் நேருவிடம் முன் கண்டவாறு உறுதியளித்தார் என்று 'சண்டே ரைம்ஸ்' செய்தி வெளியிட்டிருக்கிறது.

அச் சந்திப்பு கொழும்பு பிளவர் வீதியில் உள்ள ஜனாதிபதி நடமாடும் செயலகத்தில் கடந்த வியாழன் இரவு இடம் பெற்றது.

அமைச்சர் சாகுல் ஹமீது ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் ஆகியோரும் அச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காண முயற்சிக்கும் எவரையும் தாம் எதிர்க்கவில்லை என்றும், ஒரு கட்சித் தலைவர் என்ற முறையில் சமாதானத்தை ஏற்படுத்த திரு. தொண்டமானுக்கு உரிமை உண்டு என்றும் அப்போது ஜனாதிபதி பிரேமதாஸா தெரிவித்தார்.

'ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய தீர்வு ஒன்றைக் கொண்டு வரும் முயற்சியில் சில தீவிரவாதிகள் எனக்கு எதிராக செயல்படலாம். ஆனால் நான் ஜனாதிபதி பதவியை தியாகம் செய்வேன்' என்றும் திரு. பிரேமதாஸா கூறினார்.

'அடுத்த தேர்தலில் நான் ஜனாதிபதி பதவியை இழந்தாலும் அதனை நான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வேன். இந்த நாட்டுக்கு எனது கடமையைச் செய்த திருப்தியுள்ள மனிதனாக நான் இருப்பேன்' என்றும் அவர் தெரிவித்தார்.

அச் சந்திப்பின் போது, இன மோதலை முடிவுக்குக் கொண்டு வர அமைச்சர் தொண்டமான் எடுத்த பிரச்சினைக்குரிய' முயற்சியை ஜனாதிபதி ஆதரித்துப் பேசினார் என்று திரு. மோதிலால் நேரு கூறினார் என 'சண்டே ரைம்ஸ்' செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மரத்தின் உச்சியில் சத்தியாக்கிரகம்

கொழும்பு, ஜூன் 15

மர உச்சியில் ஏறிய நபர் ஒருவர் அங்கு சத்தியாகக்கிரகப் போராட்டம் நடத்தினாராம்.

கதிர்காமத்தைச் சேர்ந்த டபிள்யூ. ஏ. சில்வா என்றவரே இப்படிப் போராட்டம் நடத்தியவராவார்.

கதிர்காமம் பஸ் நிலையப் பகுதியில் கடைக் கட்டடம் சம்பந்தமான கோரிக்கையை பிரதேச சபை அதிகாரிகளிடம் இவர் சமர்ப்பித்ததாகவும், கடை கொடுக்க மறுத்ததையடுத்தே அவர் இப்போராட்டத்தில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(த-3)

# புலிகள் தடை பற்றிய விளம்பரம் பிரசுரிக்க "லேக்ஹவுஸ்" மறுப்பு

கொழும்பு, ஜூன் 15

விடுதலைப் புலிகள் இயக்கம் மீது இந்தியா விதித்துள்ள தடை பற்றி இந்திய அரசு கொடுத்த வர்த்தமானி விளம்பரத்தை அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள 'லேக்ஹவுஸ்' பத்திரிகைகள் பிரசுரிக்க மறுத்து விட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கேள்விகள் எழுப்பப்பட்டன.

கேள்வி: தனியாருக்குச் சொந்தமான இரண்டு பத்திரிகைகளில் மட்டுமே இந்திய அரசு வழங்கிய தடை பற்றிய வர்த்தமானி விளம்பரம் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்த விளம்பரத்தை பிரசுரிக்க 'லேக்ஹவுஸ்' மறுத்து விட்டது. அரசாங்கக் கொள்கையின் பிரதிபலிப்பா இது?

திரு. பிரட்மன் வீரக்கோன்: இங்குள்ள பத்திரிகைகளில் இவ்விளம்பரத்தைப் பிரசுரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை இலங்கை ஏற்றுக் கொண்டது. விளப்பரக் கட்டணத்தை வசூலித்துக் கொண்டு அவ்விளம்பரம் பிரசுரிக்கப்பட வேண்டியிருந்தது. அவ்விளம்டரத்தைப் பிரசுரிப்பதற்கு 'லேக்ஹவுஸ்' மறுத்துள்ளது என்றால் அதற்கான நல்ல காரணங்கள் 'லேக்ஹவுஸிடம்' உண்டா என்பது பற்றி எனக்கு தெரியாது. அது அவர்களின் விவகாரம். தீர்மானங்களை எடுக்க 'லேக்ஹவுஸ்' ஸ்தாபனத்திடம் பணிப்பாளர் சபை ஒன்று உண்டு.

கேள்வி: 'லேக்ஹவுஸ்' யாருக்குச் சொந்தமானது?

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா: எனக்கும் லேக்ஹவுஸில் சில பங்குகள் உள்ளன.

கேள்வி: 'லேக்ஹவுஸ்' நிர்வாகத்தை யார் நியமிப்பது?

திரு: வீரக்கோன்: லேக்ஹவுஸ் பத்திரிகைகளில் எத்தகைய விளம்பரங்கள் பிரசுரமாக வேண்டும் என்பது பற்றி அரசாங்கத்துக்கு எதுவித அக்கறையும் இல்லை.

கேள்வி: 'லேக்ஹவுஸ்' பத்திரிகைகளில் வெளியாகும் செய்திகள் பற்றித்தான் அரசுக்கு அக்கறை உண்டு. அப்படித்தானே...?

வீரக்கோன்: விளம்பரங்களை பிரசுரிக்க மறுத்ததற்கு லேக்ஹவுஸுக்கு காரணங்கள் இருந்திருக்க வேண்டும்.

[உ-எ]

## நக்ஸலைட்டுகளுக்கு புலிகள் பயிற்சி வழங்கினராம்!

சென்னை, ஜூன் 15

கண்ணி வெடிகளைக் கையாளுவதில் நிபுணத்துவம் மிக்க விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஒருவர், ஓய்வுபெற்ற இந்திய இராணுவ அதிகாரியுடன் இணைந்து நக்ஸலைட்டுகளின் மக்கள் போராட்ட குழுவினருக்கு கண்ணிவெடி வைப்பதிலும், வெடிக்க வைப்பதிலும் பயிற்சி அளித்தாராம்.

ஆந்திர பிரதேச கம்மம் மாவட்ட பொலீஸ் அதிகாரி ஏ.வி. நாராயணா என்பவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## வீடமைப்பு அமைச்சரின் வீடும் 6 அடி வெள்ளத்தில்!

அண்மையில் கொழும்பில் ஏற்பட்ட வெள்ளத்தின்போது வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேன கூரேயின் வீடும் ஆறு அடி நீரினுள் மூழ்கியது.

நாடாளுமன்றக் கட்டடத்தின் அடித்தளத்தில் 6 அங்குல வெள்ளம் நின்றது.

இத்தகவல்களை கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா வெளியிட்டார்.

## வேலை நிறுத்தம்

கொழும்பு, ஜூன் 15

அக்கரப்பத்தனை 'ஹோம் வூட்' தோட்டத்தில் கடந்த பத்து நாட்களாக தொடர்ந்து வேலைநிறுத்தம் நடைபெறுகிறது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கை வாபஸ் பெறக் கோரியே வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

[உ-3]

## கான்ஸ்டபிள் உயிரிழப்பு

வவுனியா, ஜூன் 15

வவுனியா மாமடுவ - அலுத்வத்தை வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை பகல் இராணுவ - பொலீஸ் கூட்டு ரோந்து மீது, விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் றிசேர்வ் கான்ஸ்டபிள் திலகரத்னா என்பவர் கொல்லப்பட்டதாகவும் —

இராணுவச் சிப்பாய் ஒருவரும், பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் காயமடைந்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது.

[உ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்க்கை ஆலய தாக்குதல் போன்று எதிர்காலத்தில் நடக்காதாம்!

## ஜனாதிபதி பிரேமதாஸா "வழமையான" உறுதிமொழி

கொழும்பு, ஜூன் 15

"துர்க்கையம்மன் ஆலயத்தில் நடந்தது போன்ற தாக்குதல்கள் எதிர்காலத்தில் நடைபெறாது."

— இவ்வாறு தனது "வழமையான" பாணி உறுதிமொழியை வெளியிட்டிருக்கிறார் ஜனாதிபதி பிரேமதாஸா.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் பிரமுகர்களுள் ஒருவரான சட்டத்தரணி ஸி. மோதிலால் நேரு தம்மைச் சந்தித்தபோதே ஜனாதிபதி இந்த உறுதி மொழியை வழங்கினார்.

வடக்கு, கிழக்கின் தற்போதைய நிலைவரம் பற்றி இச்சந்திப்பின்போது ஆராயப்பட்டதாக "சண்டே ரம்ஸ்" பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை இராணுவ நடவடிக்கையின் போது பல குடிமக்கள் உயிரிழந்தது குறித்து அப்போது ஜனாதிபதி வருத்தம் தெரிவித்தார் என்றும் கூறப்பட்டது.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம் மீது குண்டு வீச்சு நடத்தப்பட்டபோது ஐந்து சிவிலியன்கள் கொல்லப்பட்டனர். பொதுமக்களை ஆலயத்தில் தஞ்சமடையும்படி இராணுவம் கூறிய பின்னர் அத்தாக்குதல் நடத்தப்பட்டது என்று திரு. நேரு ஜனாதிபதியிடம் சொன்னார்.

இது போன்ற சம்பவங்கள் எதிர் காலத்தில் தவிர்க்கப்படும் என்று ஜனாதிபதி பிரேமதாஸா அப்போது உறுதி அளித்தாராம்

இதே வேளை திரு. நேரு "சண்டே ரைம்ஸு"க்கு கருத்து வெளியிடுகையில் —

"விடுதலைப் புலிகளின் பங்களிப்பின்றி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு எதனையும் காண முடியாது என்பதே எனது அபிப்பிராயமாகும்" என்று கூறியிருக்கிறார். [த-எ]

## மரண அறிவித்தல்கள்

### சிதம்பரம் நடேசன்

மாவை—கலட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டு இடம் பெயர்ந்து, செல்லத்துரை வீதி-கோப்பாய் தெற்கில் வசித்தவரும், காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை - கற்குழிப் பகுதியில் சாரதியாகக் கடமையாற்றியவருமான சிதம்பரம்-நடேசன் நேற்றுக் காலமாகி விட்டார். அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று [15-06-92] திங்கட்கிழமை காலை 11-00 மணியளவில் மேற்படி முகவரியில் நடைபெறும். நண்பர்களும், உறவினர்களும் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்;
திருமதி ந. மாணிக்கம்
(மனைவி)

(21400)

### அன்ரு லியோண்சியஸ்

அன்ரு லியோண்சியஸ் [இளைப்பாறிய அதிபர் யா/புங்குடுதீவு மாகாவித்தியாலயம்] நேற்று ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பெலிஸ்சிற்றஸ் [ஞானமணி] அவர்களின் அன்புக் கணவரும், செல்வி பெனிற்றா, செல்வன் அன்ரன் [ஜேர்மனி], நியூட்டன் [கனடா] ஆகியோரின் அன்புத் தந்தையுமாவர்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் இன்று [15-6-92] திங்கட்கிழமை நடைபெற்று பூதவுடல் பி. ப. 3-30 மணிக்கு 146, பிரதான வீதியிலிருக்கும் அன்னாரது இல்லத்திலிருந்து யாழ். கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்

146, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

[21403]

### திருமதி கெங்காதேவி துரைராசசிங்கம்

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த விசுவநாதர் தெய்வானைப்பிள்ளையின் அன்பு மகளும் அராலி மேற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா இராசமலரின் மருமகளும் துரைராசசிங்கத்தின் [தேங்காய் வியாபாரம்] அன்பு மனைவியுமாகிய கெங்காதேவி நேற்று ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சுஜன் [கொக்குவில் இந்துக்கல்லூரி], காயத்திரி [யாழ். இந்து மகளிர் கல்லூரி], காண்டீபன் [யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை] ஆகியோரின் அன்புத்தாயாரும் இலங்கை மின்சாரசபை பொறியியலாளர் காலஞ்சென்ற சண்முகநாதன் வேலுப்பிள்ளை, திருச்செல்வம் [பொறியியலாளர், சிங்கப்பூர்], திருமதி கமலாதேவி அண்ணாமலை, திருமதி சகுந்தலாதேவி மகேஸ்வரன், மகேஸ்வரி, திருமதி கேதீஸ்வரி மகாலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும்—

செல்வரெட்ணம் [இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்], திருமதி மகேஸ்வரி மயில்வாகனம், திருமதி மனோன்மணி தங்கேஸ்வரன், திருமதி இரத்தினசிகாமணி பாலசிங்கம், வரதராசா, திருமதி சந்திரவதனா சிவராம், திருமதி பராசக்தி சிறீதரன் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கந்தர்மடத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
க. துரைராசசிங்கம்
(கணவர்)

இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம்.

[21404]

### விசேட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடியாது என உயர்கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளதாம்.

ஆகையினால் 1990 ஆகஸ்ட் பரீட்சையின் அடிப்படையில் மாணவர்களை பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யும்போது இரு பரீட்சைகளின் புள்ளிகளையும் ஒன்றாகக் கணிக்கப்படமாட்டாதாம்.

தற்போதைய முடிவின் பிரகாரம்:-

மாணவர் விகிதாசாரத்துக்கு ஏற்ப இரு பரீட்சைகளிலும் தனித்தனியாகத் திறமை அடிப்படையில் தகுதி பெறும் மாணவர்கள் தெரிவு செய்யப்படவிருக்கின்றனர்.

#### வடபகுதி மாணவருக்கு இழப்பு

இதனால்—

நாடு முழுவதிலும் திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கையில் அதிக இடங்களைப்பெறும் வடபகுதி மாணவர்கள் அந்த வாய்ப்பை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் இம்முறை வடக்கிலிருந்து தோற்றிய மொத்த மாணவர் விகிதத்துக்குரிய எண்ணிக்கையினரே திறமை அடிப்படையிலும் தெரிவாவார்கள் என்று கூறப்படுகிறது.

இந்தத் திட்டத்தினால் 1990 விசேட பரீட்சையிலிருந்து பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்படும். வடக்கு - கிழக்கு மாணவர்களின் வெட்டுப் புள்ளி ["கட் அவுட்"] மிக உச்சமாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

பொறியியலுக்கு 300 புள்ளிகளும் முகாமைத்துவத்துக்கு 297 புள்ளிகளும் மருத்துவத்துக்கு 287 புள்ளிகளும் வெட்டுப் புள்ளிகளாக முடிவு செய்யப்பட்டிருப்பதாக விஷயமறிந்த வட்டாரங்கள் மூலம் தெரியவந்தது.

இத்தகைய சிக்கலான நிலையினால் வெட்டுப் புள்ளி பற்றி இறுதி அறிவிப்பு—உத்தியோகபூர்வ அறிவிப்பு—வெளியாவது தாமதமாகி வருவதாகவும்—

இந்த விவரம் குறித்து உயர் கல்வி அமைச்சர் என்ற முறையில் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத் நாடாளுமன்றத்தில் அறிக்கை ஒன்றை விரைவில் சமர்ப்பிப்பார் என்றும்—

அதன் பின்னரே வெட்டுப் புள்ளி பற்றிய இறுதி அறிவிப்பு வெளியாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஃ-ஏ]

# புலிகள் பிரமுகர் குமாரனை சரணடையுமாறு உத்தரவு

## சென்னை நீதிமன்றம் விடுத்தது

சென்னை, ஜூன் 15

தலைமறைவாகி இருப்பதாகக் கூறப்படும் — விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த — குமரன் என்ற பத்மநாதனை நீதிமன்றத்தில் சரணடையுமாறு சென்னை விசேட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தியாவுக்குள் கப்பல் மூலம் ஆயுதங்களைக் கடத்தி வந்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பான வழக்கில் மேற்படி குமரன் முக்கிய சந்தேக நபராகக் குறிப்பிடப்பட்டுள்ளார் என்றும் —

அது தொடர்பாகவே அவரை நீதிமன்றத்தில் சரணடையுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிடப்படும் குமரன் என்பவர் விடுதலைப் புலிகளின் ஆயுதக் கடத்தல் பிரிவுத் தலைவர் என்றும் கூறப்பட்டது.

குமரன் தொடர்பாக இந்திய வானொலி தெரிவித்ததாவது;-

சர்வதேச அளவில் ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டு வந்த குமரனிடம் 6 கப்பல்கள் இருந்தன. அதில் ஒன்றே அண்மையில் இந்தியக் கடற்படையினரால் காரைக்கால் அருகே பிடிபட்ட "டொங்னோ" ஆகும். மற்றொரு கப்பலான "சன்போர்" 1991 இல் மலேஷிய அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டது.

'பால்க்கனி" என்ற பெயரில் பாற்பண்ணை ஒன்றையும் தமிழ்நாட்டில் வேலூர் அருகே குமரன் நடத்தி வந்தார். அவரின் ஆயுதக் கடத்தல் தொடர்பு மையமாக அதுவே இருந்தது — என்று தெரிவிக்கப்பட்டது. [உ-த]

## உற்சவங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 15

உடுவில் வடக்கு அருள்மிகு ஸ்ரீ சொர்ண விநாயகர் ஆலய மகா கும்பாபிசேகம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 30 மணி முதல் நடைபெறும் மகா அபிசேகம் காலை 11. 30 மணிக்கு இடம் பெறும்

★ ★ ★

சரசாலை குலந்தைத்திடல் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய அலங்கார உற்சவத்தையொட்டி எதிர்வரும் வியாழக்கிழமை "சமயக் கட்டுப்பாடுகள் சமயத்தை வளர்க்கின்றனவா? வளர்க்கவில்லையா?" என்பது குறித்து கல்வயல் இந்து இளைஞர் மன்ற உறுப்பினர் கலந்து கொள்ளும் பட்டிமன்றம் நடைபெறும். [அ-30-117]

## இன்று

வடமராட்சி, ஜூன் 15

அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ் பாடசாலையின் இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று பிற்பகல் 1 மணிக்கு அதிபர் திரு. வ. சி. மயில்வாகனம் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். செல்லத்துரை கலந்து கொள்வார். [உ-165]

## வெற்றிலைவிலை திடீர் உயர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ்ப்பாணத்தில் வெற்றிலையின் விலை நேற்று விஷம் போல ஏறியது.

ஒரு வெற்றிலை 2 ரூபாவுக்கு மேல் விற்பனையானது. (ஒ-3)

### சிப்பாய்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெட்டியில் வேறொருவரின் சடலமே காணப்பட்டது !! தந்தை நிபுனசோம திகைப் படைந்தார்.

மகன் செனவிரத்னவுக்கு என்ன நடந்தது: அவர் உயிருடன் இருக்கிறாரா என்ற கவலை அவருக்கு ஏற்பட்டது.

நள்ளிரவு வேளை அவசரமாக இராணுவ அதிகாரிகள் குழு ஒன்று அக்கிராமத்துக்கு விரைந்து செனவிரத்னாவின் தந்தையிடம் "தவறு நேர்ந்து விட்டது. வேறொருவரின் உடலைத் தந்துவிட்டோம்" என்று கூறி பிரேதப் பெட்டியை எடுத்துச் சென்றது. ஆனால் செனவிரத்னா பற்றிய தகவல் எதையும் அக்குழு தெரிவிக்கவில்லை.

அடுத்தநாள் இரவு 10 மணியளவில் இந்த ஆள்மாறாட்ட நிகழ்ச்சியின் உச்சக்கட்டம்...! சிப்பாய் செனவிரத்னா சுகதேகியாக தமது வீட்டுக்கு வந்து சேர்ந்தார்!

சோகக் கண்ணீர் விட்ட நிபுனசோமா புதல்வனைக் கட்டிப் பிடித்தவண்ணம் ஆனந்தக் கண்ணீர் விட்டார்!!

இது நடந்தது நாவலப்பிட்டி மாவத்துறைக் கிராமத்தில்!!! [ஒ-எ]

### முதலமைச்சரை...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

புதல்வியும் கூறுகின்றார்கள். எனது பொறுப்புக்கள் எவை என்பது எனக்குத் தெரியும். எதிர்காலத்தில் பெரு வெள்ளங்களைத் தவிர்க்கக்கூடிய முயற்சியை நாம் எடுக்க உள்ளோம்"— என்றும் முதலமைச்சர் சொன்னார். [ஒ-எ]

### வலி, வடக்கில்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்படும் உணவும்—போதாது என்று அகதிகளில் பலர் அதிருப்தி தெரிவித்தனர். பலர் மாற்று உடுப்பு இல்லாமல் கூடக் கஷ்டமுறுகிறார்கள்.

#### அச்சத்துடன் வாழ்கிறோம்

சொந்த இருப்பிடங்களை விட்டு உடுத்த உடையுடன் வெளியேறிய நாம் அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத நிலையில் அச்சத்தின் மத்தியில் வாழ்கிறோம். இருக்க இடம் இல்லை. குழந்தைகளைப் படுக்க வைக்க பாய் இல்லை. கைக்குழந்தைகளை நித்திரையாக்குவதற்கு சேலைகளைக் கொண்டு மரக் கொப்பில் ஏணை கட்டி குழந்தைகளை நித்திரையாக்க வேண்டிய நிலை. வயோதிபர்களை கொளுத்தும் வெய்யிலில் வாடவைக்கும் நிலை. சொல்லொணாக் கஷ்ட நிலையில் வாழ்கிறோம் — என்றார் ஒரு குடும்பஸ்தர்.

"தேவாலயத்தை சூழவுள்ள சிறிய மரங்களின் நிழலில் தான் படுத்துறங்க வேண்டியுள்ளது. நோய்வாய்ப்பட்ட நிலையில் இப்படி ஒரு வாழ்க்கையா?" என்று சலித்துக் கொண்டார் வயோதிபர் ஒருவர்.

முன்சொன்ன கிராமங்களில் இருந்து இடம்பெயர்ந்தவர்களில், 80 குடும்பங்களை சேர்ந்த 600 பேர் ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும், 65 குடும்பங்களைச் சேர்ந்த 267 பேர் நிற்சாமம் விக்கினேஸ்வரா வித்தியாலயத்திலும், 10 குடும்பங்களைச் சேர்ந்த 75 பேர் சங்கானை முள்ளியடி வைரவர் ஆலயத்திலும் தஞ்சம் அடைந்துள்ளனர். [அ-3]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 15 - 06 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org